<u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

ஓ.எஸ்.எண் .106/2022 நாள்.31.07.2023

2023 ம் ஆண்டு ஜூலை திங்கள் 31 ம் நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | கண்ணு | சாதி | |
| கிராமம் | ஆலம்பூண்டி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 88 |

**<u>வ.சா.1</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

I. எனக்கு எழுத, படிக்க தெரியும். நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. ஆங்கிலத்தில் கையெழுத்து மட்டும் போடுவேன். நான் தாக்கல் செய்து வழக்குரை விவரங்கள் எனக்கு தெரியும். பாண்டின் பேரில் ரூ. 2 லட்சம் கடனாக பெற்றதை திருப்பி தரவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி 2015 ம் ஆண்டு எங்கள் ஊரில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தார். என் மனைவிக்கு முதியோர் உதவித்தொகை வாங்குவது சம்பந்தமாக பிரதிவாதியை சந்தித்த போது தான் எனக்கும், அவருக்கும் பழக்கம் என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்வேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 2015 ம் ஆண்டு என்னிடம் கைமாற்று கடனாக ரூ. 50 ஆயிரம் கேட்டார் என்றால் சரியல்ல. அதற்கு நான் சம்மதம் தெரிவித்து 30,000/- , 10,000/-, 10,000/- என்று மூன்று தவனைகளாக பிரதிவாதிக்கு ரூ. 50 ஆயிரம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2015 யிலிருந்து 2017 வரை 100 க்கு ரூ. 10 வட்டி கேட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ. 100 க்கு ரூ. 6 வட்டி தருவதாக சொன்னதற்கு நான் சம்மதம் சொன்னேன் என்றால் சரியல்ல.

II. பிரதிவாதி வட்டியாக 24 தவனைகளாக ரூ. 1, 20,000/- என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு மீதி 2 ஆயிரமும், பாக்கி வட்டியும் மட்டும் தான் பிரதிவாதி எனக்கு தரவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தம்பி 2017 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். 06.05.2021 பிரதிவாதியின் மகள் இறந்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி குடும்பத்தில் தொடர்ந்து இறப்பு

ஏற்பட்டதால் தான் மீதி 2 ஆயிரத்தை பிரதிவாதி திருப்பி தரவில்லை என்றால் சரியல்ல. 29.04.2022 தேதியில் பிரதிவாதி ரூ. 2 லட்சம் என்னிடம் கடன் வாங்கியதாக அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை பிரதிவாதியின் மகள் தான் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்பு பிரதிவாதி என்னை சந்தித்தார் என்றால் சரியல்ல. அப்போது பிரதிவாதி ரூ. 2 ஆயிரம் மட்டும் தான் தரவேண்டும் என்றும் ஏன் ரூ. 2 லட்சம் வாங்கியதாக அறிவிப்பு கொடுத்தீர்கள் என்று கேட்டதற்கு நான் பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று நான் சொன்னதால் தான் பிரதிவாதி பதில் அறிவிப்பு தரவில்லை என்றால் சரியல்ல. தணிகாசலம் என்பவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். அவருடைய அலுவலகத்தில் பேசி கொள்ளலாம் என்று பிரதிவாதியை அழைத்தேன் என்றால் சரியல்ல. தணிகாசலம் அலுவலகத்தில் வைத்து பேசிய போது பிரதிவாதி ரூ. 2 ஆயிரம் மட்டும் தான் தரவேண்டும் என்று சொன்னதற்கு பொறுப்பிற்காக பாண்டில் பிரதிவாதியிடம் கையெழுத்து பெற்றேன் என்றால் சரியல்ல.

III. பிரதிவாதி வெற்று பாண்டில் கையெழுத்து போடும் போது தணிகாசலம், ஏழுமலை ஆகியோர் தான் இருந்தார்கள் என்றாலும், பாண்டில் கையெழுத்து போட்டுள்ள வெங்கடேசன் என்பவர் அப்போது அங்கு இல்லை என்றால் சரியல்ல. 18.11.2020 தேதியில் பாண்டு எழுதியதாக சொல்லும் தேதியில் எந்த பணமும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வீடுகட்டுவதற்கு என்னிடம் கடன் கேட்டார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதி வீடு கட்டுவதற்காக தான் என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புலும் வீடு கட்டுவதற்காக பிரதிவாதி கடன் கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூ. 2 லட்சம் வாங்கவில்லை என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.